18.11.2025 O.S 276/2016 பி.வா.சா1 விஜயசிங்ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அந்த 1 முதல் 3 பிரதிவாதிகள் பாவூர்சத்திரம் வணிக சங்கத்தை சேர்ந்தவர்கள் என்றும் பொறுப்புகள் மட்டும் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சங்கம் பதிவு செய்யப்பட்ட சங்கம் ஆகும். அந்த சங்கமானது 2003 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. நிர்வாகிகள் பதவிகாலம் 3 வருடத்திற்கு ஒரு முறை மாற்றியமைக்கப்படும். 2018 ம் ஆண்டு நாங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டோம். கடந்த ஆண்டு நாங்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். அவ்வாறு தேர்வு செய்யப்பட்டதற்கு மாவட்ட பதிவாளருக்கு அனுப்பி வைத்துள்ள விண்ணப்பம் உள்ளது. மாவட்ட பதிவாளர் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஆவணம் இன்னும் பெறப்படவில்லை. எங்களது சங்கத்தில் தனியாக துணை விதிகள் உள்ளது என்றால் சரிதான். துணை விதி விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சங்கத்தின் எல்லா முடிவுகளும் சங்கத்தின் நிர்வாக குழு தான் முடிவுசெய்ய வேண்டும் என்றால் செயற்குழு கூடி முடிவு செய்யும். அதனை பொதுக்குழு அங்கீகரிக்க வேண்டும் என்றால் சரிதான். சொத்துக்கள் வாங்க வேண்டுமெனில் துணை விதிகளில் யாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த நபர் பெயருக்கு சொத்துக்கள் வாங்க வேண்டுமெனில் செயற்குழு கூடி யார் பெயரில் வாங்க வேண்டும் என கூறுகிறார்களோ அவர்களது பெயரில் வாங்கப்படும். அதன்படி இந்த வழக்கு சொத்து உள்ளது. வேறு சொத்துக்கள் இல்லை. வழக்கு சொத்தை செயற்குழுவால் தீர்மானம்ஏற்றப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதா என்றால் 2006 ம் ஆண்டு தீர்மானம்

ஏற்றப்பட்டுள்ளது. ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு முன்னர் அந்த ஆவணங்களை பார்த்தேனா என்றால் தேவை ஏற்படாததால் நான் அதை பார்க்கவில்லை. சொத்துக்கள் வாங்க வேண்டுமெனில் சங்கத்தின் பொதுநிதியில் இருந்து எடுத்து வாங்கப்படும் என்றால் சரிதான். வழக்கு சொத்தை வாங்குவதற்கு சங்கம் நிறைவேற்றிய தீர்மானத்தை நான் பார்த்தேன். தீர்மான நகல் சங்கத்தில் உள்ளதா என்றால் உள்ளதா என்பது பற்றி உறுதியாக தெரிய வில்லை. அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆவணம் இருந்தால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வழக்கின் வரவு செலவு உள்பட அனைத்து செலவுகளும் எங்களது சங்கதில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு தனியாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள அதிகாரத்தின்படி நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். சங்கத்தில் சொத்துக்கள் விபரங்கள் சம்பந்தமாக பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றதா என்றால் பராமரிக்கப்படுகின்றது. மேற்படி பதிவேட்டில் வழக்கு சொத்தை வாங்கியதற்கான குறிப்புகள் ஏதேனும் உள்ளதா என்றால் சொத்து வாங்கியதற்கான குறிப்புகள் உள்ளது. தாக்கல் செய்யவில்லை. இது சம்பந்தமாக ஒவ்வொரு வருடமும் மாவட்ட பதிவாளருக்கு தகவல் கொடுக்கப்படும் என்றால் வரவு செலவு கணக்கு மட்டும் தான் கேட்பார்கள். மற்ற விபரங்களை கேட்கமாட்டார்கள். சொத்து பதிவேட்டில் கட்டிடம் கட்டியதாக தாக்கல் செய்துள்ளோம். வழக்கு 1ம் லக்க சொத்து வாதிகளின் முன்னோர்கள் மோசை நாடார், பால்நாடார் ஆகிய இருவருக்கும் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆட்சேபனை

உள்ளதா என்றால் பட்டா 3 நபர்கள் பெயரில் உள்ளது. என் முதல்விசாரணை வாக்குமூலத்திலும், என்னுடைய எதிர்வழக்குரையிலும் வழக்கு 1லக்க சொத்து மோசை நாடார், பால்நாடார் ஆகியோர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என ஒப்புக்கொண்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மோசை நாடார், பால்நாடாரின் வாரிசுகள் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், ஆட்சேபனை உள்ளதா என்றால் அவர்கள் வாரிசுகளா என்பது எனக்கு தெரியாது. வாதிகள் மோசை நாடார் மற்றும் பால் நாடார் ஆகியோர்களின் வாரிசுகள் என்பதற்கு எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகு வாதிகள் யார் என்று விசாரித்தேனா என்றால் வாதிகளை தெரியும். அவர்கள் மோசை மற்றும் பால்நாடாரின் வாரிசுகளா என்பது பற்றி தெரியாது. அது சம்பந்தமான எந்த விசாரணையும் செய்தேனா என்றால் அவசியம் ஏற்படவில்லை. மோசை மற்றும் பால்நாடார் ஆகியோர்களின் வாரிசுகளின் அடிப்படையில் வழக்கு சொத்தை 1,2 வாதிகள் பெற்று அனுபவம் செய்வதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சொல்லியுள்ளார்கள். அது தவறாகும். எங்களது அனுபவத்தில் தான் உள்ளது. நாங்கள் மோசை மற்றும் பால்நாடாரின் அவர்கள் வழியில் இருந்து கிரையம் பெற்றுள்ளோமா அல்லது வேறு நபர்களிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளோமா என்றால் மோசை மற்றும் பால்நாடாரின் வழிகளிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளோம். 1943 ம் ஆண்டுகளிலேயே வாதிகளுக்கு இந்த சொத்து கிடையாது. அப்போதே அதனை விற்பனை செய்து விட்டார்கள். வழக்குசொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்னர் முன் வில்லங்கம் எடுத்து பார்த்தோமா என்றால் எடுத்து பார்த்து தான் வாங்கப்பட்டது. 1943 க்கு முன்னர் வாதிகளின் முன்னோர்கள் உரிமையாளர்களாக

இருந்துள்ளனர். 1943 ம் ஆண்டிற்கான வில்லங்க சான்றிதழை எடுத்து பார்த்தோமா என்றால் பார்த்தோம். அந்த சொத்தை 1943 ம் ஆண்டு யார் யாருக்கு விற்பனை செய்துள்ளதாக பதிவுகள் உள்ளதா, இல்லையா என்றால் பதிவுகள் இருந்தது. அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. அவ்வாறு 1943 ம் ஆண்டு விற்பனை ஆவணத்தை நான் நகல் எடுத்து பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். சங்கத்தில் அந்த ஆவணம் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய வில்லை என்றால் தெரியவில்லை. 1943 ம் ஆண்டு வழக்கு சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. 1943 ம் ஆண்டு சம்பந்தப்பட்ட ஆவணத்தின் விபரங்களை எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. ஆவண தேதி 30.03.1943 என்ற ஆவணத்தை பற்றி எதிர்வழக்குரையில் பலமுறை சொல்லியுள்ளேன் என்றும், அந்த ஆவணத்தை எதனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் அது இந்த வழக்கு சொத்தை குறிக்காது என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அந்த ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் தெரியாது. அந்த ஆவணம் குறித்தோ, தொடர் நடவடிக்கை குறித்தோ முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 1943 ம் தேதியிட்ட ஆவணத்தை பற்றி என்னால் சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் முடியும். பி.வா.சா.ஆ 1 ஆவணமானது 1972 ம் ஆண்டு எம்.கே.வி. கந்தசாமி நாடார் கிரையம்

வாங்கியதாக கூறி சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி–வா.சா.ஆ 1ல் கண்ட முழு சொத்தையும் வா'ங்கினோமா அல்லது பகுதியை வாங்கினமோ என்றால் முழு சொத்தையும் வாங்கியுள்ளோம். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தின் அசலை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் கந்தசாமி நாடாரிடமிருந்து நேரடியாக வாங்க வில்லை. பாகபிரிவினை செய்த பிறகு அவர்களது வாரிசுகளிடம் இருந்து வாங்கியதால் அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ 1 அசல் ஆவணம் எங்கு உள்ளதா என்றால் தெரியாது. பி.வாசா.ஆ 1 ஆவணத்தின் அடிப்படையில் பாகபிரிவினை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நாங்கள் கிரையம் பெற்றோம். வழக்கு சொத்து சம்பந்தமாக இரண்டு பாகபிரிவினை ஏற்பட்டுள்ளது. அதில் 2 வது பாகபிரிவினையில் சொத்தை வாங்கியுள்ளோம். அதில் முதல் பாக பிரிவினை ஆவணத்தை வாங்கி பார்த்தோமா என்றால் வாங்கி பார்த்தோம். அதிலுள்ள மால்களின் அடிப்படையில் எங்களுக்கு சொத்தை ஒப்படைத்தார்கள். இரண்டு பாக பிரிவினை ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே நம்பர் தெரியுமா என்றால் 344/5 ஏ ஆகும். பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள சொத்தானது புல எண்.343 ஐ குறிக்கும் என்றால் சரிதான். ஆனால் நான்கு மால்கள் புல எண் 344/5 ஏ–ஐ குறிக்கும். அந்த நான்கு மால்கள் புல எண். 344/5 ஏ–ஐ குறிக்கும் என கந்தசாமி நாடார் வாரிசுகளிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 1 கிரைய காலத்திற்குரிய வில்லங்கம் எடுத்து பார்க்கப்பட்டதா என்றால் ஞாபகமில்லை. வழக்கில் வில்லங்க சான்று எதுவும் தாக்கல்

செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். ஆவணங்கள் பற்றி தெரியவில்லை. வழக்கில் தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிதழ் பற்றி சொல்ல தெரியுமா என்றால் தெரியாது. கந்தசாமி நாடாருக்கு நான்கு மகன்களும், இரண்டு பெண் குழந்தைகளும் என்றால் நான்கு ஆண் மகன்கள் மட்டும் தெரியும். பெண் குழந்தைகள் இருந்தார்களா என்பது பற்றி தெரியாது. பாகபிரிவினையில் கந்தசாமி நாடாரின் பெண் குழந்தைகளுக்கு என்ன சொத்து கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் ஆண் மக்கள் 4 பேர் மட்டுமே பாகபிரிவினை செய்து கொண்டதாகவும், பெண் மக்களுக்கு பாகபிரிவினை கொடுத்தாக குறிப்புகள் இல்லை என்றால் தெரியாது. 2 வது பாகபிரிவினையில் மகள்களுக்கு பாக பிரிவினை கொடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது. வழக்குரையில் காண்பிக்கப்பட்டுள்ள 1 ம்லக்க சொத்தை எதிர்வழக்குரையில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில் 19 பேர் சேர்ந்து ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றும், ஆனால் ஆவணத்தில் 24 பேர்கள் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் எது சரியானது என்றால் 19 நபர்களா அல்லது 24 நபர்களா என்று எனக்கு தெரியாது. அதில் சொல்லப்பட்ட நபர்களுக்கு சொத்துரிமை அவர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 3 ஆவணத்தின்படி யாருக்கும் சொத்துரிமை மாற்றம் செய்யப்படவில்லை என்றால் பாதை மாற்றம் மட்டும் ஏற்பட்டுள்ளது. உரிமை மாற்றம் ஏற்படவில்லை. பி.வா.சா.ஆ 3 ஆவணத்தின் அசல் ஆவணம் எங்குள்ளதுஎன்றால் தெரியாது. பி.வா.சா.ஆ 3 ஆவணத்தில்

கணேசனுக்கு பாத்தியப்பட்டதாக எத்தனை சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. கந்தசாமி மகன் கணேசனின் வாரிசுகள் பி.வா.சா.ஆ 4 ஆவணத்தின்படி பாக பிரிவினை செய்து கொண்டதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கணேசனுக்கு எத்தனை வாரிசுகள் என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 4 ஆவணம் மட்டுமே கணேசன் குடும்பத்தில் நடந்த முழுமையான பாக பிரிவினை பத்திரமா என்றால் தெரியாது. கணேசனுக்கு பாத்தியப்பட்ட முழு சொத்து விபரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் 5 ம் தபசில் சொத்தை அடைந்தவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் யார் அனுபவம் செய்ய வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் லதா, தங்கஷாலினி, ராஜபிரியா, பெரியமாலினி ஆகியோர்கள் பெயர்கள் உள்ளது. இந்த வழக்கில் மேற்படி 4 பேரும் 4 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் 5 ம்லக்க சொத்து 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது என்றும், வேறு யாருக்கும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் 5 வது தபசில் 10 வது இன சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 343 என சொல்லப்பட்டுள்ளது. அந்த சர்வே எண் தற்போது புல எண் 343 ல் 1 முதல் 8 உட்பிரிவுகளில் கட்டுப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மற்றவை கணிணியில் தட்டச்சு செய்தும், உட்பிரிவு விபரம் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் எழுதப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ 4 ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் கையில் எழுதப்பட்ட விபரம் குறித்து 4 முதல் 7 பிரதிவாதிகளிடம் கேட்டு தெரிந்து

கொண்டேனா என்றால் நான் கேட்கவில்லை. அந்தவிபரம் சரியானதா, தவறானதா என்றால் அது பற்றி தெரியாது. பி.வா.சா.ஆ 4 ஆவணமானது வாதி தரப்பில் வா.சா.ஆ 9 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் 5 லக்க தபசில் 10 ம் இன சொத்து விஸ்தீரணம் எவ்வளவு சொல்லப்பட்டுள்ளது என்றால் 80 செண்ட் சொல்லப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ 5 ஆவணம் வழக்கு 1 ம்லக்க சொத்தை நாங்கள் கிரையம் வாங்கியதற்கான ஆவணம் ஆகும். பி.வா.சா.ஆ 5 ஆவணத்திற்கு மூலஆவணம் பி.வா.சா.ஆ 4 ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 5 ஆவணம் தான் வாதி தரப்பில் வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 5 ஆவணம் எழுதி வாங்கும் போது அப்போதைய தலைவர் ஜெயச்சந்திரன் இருந்துள்ளார். அந்த ஜெயசந்திரன் என்பவர் கந்தசாமி நாடாரின் மகன் என்றால் சரிதான். எழுதி வாங்கியவர்களில் மேலும் இரண்டு நபர்கள் அமைப்பாளர், செயலாளர் உள்ளார்கள். எழுதி கொடுத்தவர்கள் தரப்பில் வழக்கு 4 முதல் 7 பிரதிவாதிகள் காண்பிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எந்த சொத்து பாத்தியப்பட்டதோ அந்த முன் ஆவணங்களை குறிப்பிட்டு பி.வா.சா.ஆ 5 ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்ணை சரி செய்து கிரையம் வாங்கியுள்ளோம். எந்த ஆவணத்தின் அடிப்படையில் எந்த சர்வே நம்பரை எவ்வாறு சரி செய்தோம் என்றால் 1984 ம் ஆண்டு பட்டா ஏற்பட்டதில் புல எண்.344/5 ஏ பதிவு இருந்தது. நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் என்ன புல எண் குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்தபுல எண்ணை திருத்தம் செய்து கிரையம்

வாங்கப்பட்டது. அவ்வாறு திருத்தம் பி.வா.சா.ஆ 5 ஆவணத்திற்கு முன்பே செய்யப்பட்டதாகும். பட்டா வாங்கியதாகவோ அதன் அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டதாகவோ பி.வா.சா.ஆ 5 ஆவணத்தில் சொல்லப் படவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு சீர்திருத்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. பி.வா.சா.ஆ 6 ஆவணம் சீர்திருத்த ஆவணம் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வாதிகள் தரப்பில் எங்களது சங்க நிர்வாகிகளுக்கும், 4ம் பிரதிவாதிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக வா.சா.ஆ 10 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 10 அறிவிப்பு 13.10.2016ம் தேதி அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு செயற்குழு உறுப்பினர் உள்பட அனைவருக்கும் தெரியும். அதன்பிறகு 25.10.2016 அன்றுதான் சீர் திருத்த ஆவணம் எழுதப்பட்டதாக பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 6 ஆவணமானது பி.வா.சா.ஆ 5 ஆவணம் ஏற்படுத்தப்பட்டு 10 ஆண்டுகள் கழித்து சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் எழுதி கொடுத்தவர்கள் இளவராக இருந்ததால் 10 ஆண்டுகள் கழித்து செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ 5 ஆவணத்தில் யார் இளவராக இருந்தார்கள் என்றால் பெரிய மாலினி, ராஜபிரியா ஆகியோர்கள் இளவர்களாக இருந்தார்கள். விடுபட்டதை சேர்க்கவும், இளவர்கள் இருவரும் மேஜராக பின்னரும் சேர்த்து சீர்திருத்தம் செய்யப்பட்டது. பட்டா ஏற்பட்டதை விடுபட்டதை சேர்த்தும், கூடுதலாக விபரங்களை கூறி சீர்திருத்த பத்திரம் எழுதப்பட்டது. சீர்திருத்த ஆவணம் பி.வா.சா.ஆ 6 ஐ எத்தனை நபர்கள் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் 7 நபர்கள் எழுதிக்கொடுத்துள்ளார்கள். பி.வா.சா.ஆ 5 ஆவணத்தை எழுதிகொடுத்தவர்களின் வாரிசுகள் யாரும் பி.வா.சா.ஆ 6 ஐ

எழுதிக்கொடுக்கவில்லை என்றால் தெரியாது. யார் சீர்திருத்த பத்திரம் எழுதி கொடுத்தார்கள் என்று தெரியாது. எதற்காக கூடுதலான நபர்கள் சேர்க்கப்பட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 6 எழுதும் போது நான் நிர்வாகியாகவும், செயற்குழுவிலும் இல்லை. பி.வா.சா.ஆ 6 ஆவணத்தை பொறுத்து ஏற்படுத்த வேண்டும் என நிர்வாகிகளுக்கு இடையே ஏதேனும் தீர்மானம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். யாருடைய பிழையால் சீர்திருத்த ஆவணம் ஏற்படுத்த அவசியம் ஏற்பட்டது என்றால் எங்கள் ஆவணத்தை பலப்படுத்த வேண்டும் என்பதற்காக எழுதி வாங்கப்பட்டது. பி.வா.சா.ஆ 5 ஆவணத்தில் சரியான புல எண் குறிப்பிட்டு தான் வாங்கப்பட்டுள்ளது. என்ன குறைபாடு பி.வா.சா.ஆ 5 ஆவணத்தில் இருந்தது என்றால் பட்டா , பாதைஇணைப்பு, இளவரிடம் கையெழுத்து வாங்க வேண்டி இருந்ததால் சீர் திருத்த ஆவணம் செய்யப்பட்டிருந்தது. பி.வா.சா.ஆ 6 ஆவணம் கடந்த 25.10.2016 ம் தேதி எழுதப்பட்டுள்ளது. இந்த வழக்கானது 8.11.2016 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சங்கத்திற்கு தெரியுமா என்றால் தெரிந்திருக்கலாம். பி.வா.சா.ஆ 6 ஆவணம் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 14.11.2015 அல்லது 2016 என்று தெரியவில்லை. அந்த ஆவணத்தில் பக்கம் 24 ல் இணைக்கப்பட்டுள்ள வாரிசு சான்று குறித்து எனக்கு எதுவும் தெரியாது. பி.வா.சா.ஆ 5 மற்றும் 6 ல் ஏதேனும் எல்கை மால்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ 4 ல் கண்ட சொத்துக்களுக்கும், பி.வா.சா.ஆ 5 ல் கண்ட சொத்துக்களுக்கு வேறுபாடு உள்ளதா என்றால் அதே எல்கையில் பாதையை கழித்து சர்வே எண்ணை சரி செய்து 80 செண்டில் 76-1/2 செண்டு கிரையம் வாங்கப்பட்டுள்ளது.

புல எண் 343 ல் இருந்து புல எண்.544/5 ஏ– மாற்றம் செய்யப்பட்டதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் பட்டா உள்ளது. வருவாய் ஆவணங்கள் அனைத்தும் உள்ளது. பி.வா.சா.ஆ 17 ஆவணம் ரீ சர்வே ரீ செட்டில்மெண்ட் ஆவணமாகும். பி.வா.சா.ஆ 17 ஆவணத்தில் புல எண். 343 ல் உள்ள பட்டாதாரர் வாதியின் முன்னோரான மோசை நாடார் என்றால் அது பற்றி தெரியாது. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பலசரக்கு கடை வைத்துள்ளேன். மரகடை வைக்க வேண்டுமெனில் டிம்பர் வைப்பதற்கு உரிய அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். வனத்துறையிடமும் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எப்போதும் மரஅறுவை மில் இருந்தது இல்லை என்றால் மரஅறுவை மில் இல்லை. மர அறுவை மில்லுக்கு தேவையான பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது. மர அறுவை மில்லுக்கு தேவையான பொருட்கள் 1972 க்கு பிறகு வைக்கப்பட்டிருந்தது. நான் 1982 ல் பிறந்தேன். 1972 ல் இருந்து 1982 வரை நடந்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கேட்டு தெரிந்து கொண்டேன். வழக்கு சொத்தானது எங்களது வீட்டிற்கு அருகில் நடந்து செல்லும் தூரத்தில் உள்ளது. மர அறுவை மில் வைப்பதற்கு ஏதேனும் உரிமம் பெறப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கந்தசாமி நாடாரின் மகன் பெரியசாமி நாடார் தான் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்ட கிரையம் வாங்கியதாக சொல்லும் பெரியசாமி நாடார் என்றால் சரிதான். அவ்வாறு பி.வா.சா.ஆ 31 ல் கண்ட சொத்தானது புல எண் 343 ஆகும். பெரியசாமி நாடாரின் மகன் தான் பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள ஜெயசந்திரன் என்றால் சரிதான். ஜெயசந்திரன் சங்க சொத்தையும்,

அவரது சொத்தையும் முறையாக ஆவணப்படுத்தி பராமரிக்கும் திறமைபடைத்தவர் என்றால் அது எனக்கு தெரியாது. ஜெயசந்திரன் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. அந்த ஜெயசந்திரன் தற்போது தலைவராக இல்லை. பி.வா.சா.ஆ 20 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் புஞ்சைவகைபாடு கொண்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 1432ம் பசிலியில் தரிசு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் கட்டிடம் கட்ட அனுமதி வாங்கப்பபட்டுள்ளதாக சொல்லியுள்ளேன். அந்த கட்டிட அனுமதி மற்றும் வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் சங்கத்தில் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதை தாக்கல் செய்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.